# 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 18/2014)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Hostels and Homes for Women and Children (Regulation) Act, 2014

## (Tamil Nadu Act No.18 of 2014)

(as on 31st October, 2023)

தமிழாக்கம் :
தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 18/2014)

பிரிவு பொருளடக்கம்


**பகுதி–I**

**முன்னுரை**

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.

**பகுதி – II**

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உரிமம் பெற்றுள்ள விடுதிகள், தங்கும் விடுதிகள் மற்றும் காப்பகங்கள்.**

3. குறித்த சில காப்பகங்களுக்கு வகைமுறைகள் பொருந்தாது.
4. உரிமம் இல்லாமல் விடுதிகள் மற்றம் காப்பகங்கள் நடத்தப்படுதல் கூடாது.
5. உரிமத்திற்கான விண்ணப்பம்.
6. தற்போதுள்ள விடுதிகள் மற்றும் காப்பகங்கள் தொடர்பான வகைமுறை.
7. புதுப்பித்தல்.
8. உரிமத்தின் உள்ளடக்கங்கள்.
9. உரிமத்தை இரத்து செய்வதற்கு அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அதிகாரம்.
10. மேல்முறையீடு.
11. உரிமத்தை ஒப்படைத்தல்.

**பகுதி – III**

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களின் பதிவு**

12. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களின் பதிவு.

**பகுதி – IV**

**மேலாளரின் பணியமர்த்தம், அவருடைய கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

13. மேலாளரின் பணியமர்த்தம்.
14. மேலாளரின் பொறுப்புகள்.

**பகுதி – V**

**பாதுகாப்பு மற்றும் காவலுக்கான நடவடிக்கைகள்**

15. அனுமதிக்கப்பட்ட கட்டடத்தையே பயன்படுத்த வேண்டும்.
16. பாதுகாப்புப் பணியாளர்களின் பணியமர்த்தம்.
17. வருகை தருபவர்களின் பதிவேட்டினைப் பராமரித்தல்.
18. மேலாளர், பெற்றோர் முதலானவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.
19. குறித்தசில நிகழ்வுகள் தொடர்பான அறிக்கை.

**பகுதி – VI**

**குற்றங்கள் மற்றும் தண்டனைகள்**

20. உரிமம் பெறாததற்கான மற்றும் பதிவு செய்யாமைக்கான தண்டனை.
21. நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.

**பகுதி VII**

**பல்வகை**

22. ஆய்வு செய்வதற்கான அதிகாரம்.

23. பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படுவதில்லை.
24. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.
25. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.
26. பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.
27. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

# 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம்
## தமிழ்நாடு சட்ட எண் 18/2014

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2014ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றுப் பொதுத்தகவலுக்காக தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள், தங்கும் விடுதிகள், காப்பகங்கள் மற்றும் அது போன்ற பிற நிறுவனங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக மற்றும் அதனுடன் தொடர்புடைய விவரங்களுக்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

## பகுதி–I
## முன்னுரை

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** (1) இந்தச் சட்டம், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்.–** இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "குழந்தை" என்பது, பதினெட்டு வயது நிறைவடையாத சிறுவன் அல்லது சிறுமி எனப் பொருள்படும்;

(b) "ஆட்சியர்" என்பது, மாவட்ட ஆட்சியர் எனப் பொருள்படும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி ஆட்சியரின் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அரசால் தனிப்பட்ட முறையில் பணியமர்த்தம் செய்யப்பட்ட அலுவலர் எவரையும் உள்ளடக்கும்;

(c) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(d) "மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம்" என்பது, அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும், மகளிர் அல்லது குழந்தைகள் அல்லது அவர்கள் இருவரையும் தங்கவைப்பதற்காக, கவனிப்பதற்காக, பாதுகாப்பதற்காக மற்றும் அவர்களின் நலனுக்காக நிறுவப்பட்டுள்ள அல்லது பராமரிக்கப்பட்டுள்ள அல்லது நிறுவுவதற்குக் கருதப்பட்டுள்ள நிறுவனம் எனப் பொருள்படும்;

(e) "விடுதி அல்லது தங்கும் விடுதி" என்பது, மகளிர் அல்லது குழந்தைகளுக்காக அல்லது இருவருக்காக, உணவுடனோ அல்லது உணவு இல்லாமலோ தங்கும் வசதி செய்யப்பட்டுள்ள கட்டடம் எனப் பொருள்படும்;

(f) "உரிமதாரர்" என்பது, இந்தச் சட்டத்தின்படி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒன்றிற்கான உரிமம் வைத்திருப்பவர் எனப் பொருள்படும்;

(g) "மேலாளர்" என்பது, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி அல்லது தங்கும் விடுதி அல்லது காப்பகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது நிருவாகம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள நபர் எனப் பொருள்படும்;

(h) "நபர்" என்பது, கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அல்லது இல்லாதிருப்பினும் பொறுப்புக் கட்டளை, சங்கம் அல்லது தனிநபர்களின் கழகம் அல்லது நிறுமம் ஒன்றினை உள்ளடக்கும்;

(i) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(j) "பெண்" என்பது, பதினெட்டு வயது நிறைவடைந்த பெண் எனப் பொருள்படும்.

## பகுதி – II

## மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உரிமம் பெற்றுள்ள விடுதிகள், தங்கும் விடுதிகள் மற்றும் காப்பகங்கள்.

**3. குறிப்பிட்ட சில காப்பகங்களுக்கு வகைமுறைகள் பொருந்தாது.–** இந்தப் பகுதியிலுள்ள எதுவும், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனாலும் நிர்வகிக்கப்படும், புறக்கணிக்கப்பட்ட மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களுக்கு அல்லது சீர்த்திருத்த அல்லது பாதுகாப்பான அல்லது பிற காப்பகங்களுக்கு அல்லது பள்ளிகள் எதற்கும் பொருந்தாது.

**4. உரிமம் இல்லாமல் விடுதிகள் மற்றும் காப்பகங்கள் நடத்தப்படுதல் கூடாது.–** நபர் எவரும் குறித்திட்ட நாளன்றும் அதற்குப் பின்பும் இந்தச் சட்டத்தின்படி அன்றியும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமமொன்றுக்கு இணங்கியவாறு இல்லாமல், விடுதி அல்லது தங்கும் விடுதி அல்லது மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் எதனையும் நிறுவுதல், பராமரித்தல் அல்லது நடத்துதல் கூடாது.

**5. உரிமத்திற்கான விண்ணப்பம்.–** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஆகியவற்றை நிறுவுவதற்கு, பராமரிப்பதற்கு

அல்லது நடத்துவதற்கு விரும்பும் ஒவ்வொரு நபரும், வகுத்துரைக்கப்படும் விவரங்கள் அடங்கியுள்ள அத்தகைய படிவத்தில் உரிமத்திற்கான விண்ணப்பத்தை ஆட்சியரிடம் அளிக்கவேண்டும். உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் முறையில் மூவாயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்துடன் சேர்ந்து இருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி விண்ணப்பம் ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன்பேரில், ஆட்சியர் அவருக்குத் தேவையெனத் தோன்றும் விசாரணையைச் செய்த பின்பு, உரிமத்தை வழங்கலாம் அல்லது உரிமத்தை வழங்க மறுக்கலாம். வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும் மற்றும் அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்குச் செல்லுந்தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படி உரிமம் வழங்க ஆட்சியர் மறுக்கிறவிடத்து, அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களை எழுத்து வடிவில் அளிக்கவேண்டும்.

6. **தற்போதுள்ள விடுதிகள் மற்றும் காப்பகங்கள் தொடர்பான வகைமுறை.–** (1) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், உட்பிரிவு (2)இன்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு அடுத்து முன்பு, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தைப் பராமரித்து வரும் அல்லது நடத்துகிற நபர் ஒவ்வொருவரும், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தைத் தொடர்ந்து நடத்தலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை

அல்லது காப்பகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு உரிமையுடைய நபர் ஒவ்வொருவரும், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் தொடர்பாக பிரிவு 5இன்படியான உரிமத்தை அவர் பெற்றிருந்தாலன்றி, இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு மாதக் காலஅளவு முடிவுற்ற பின்பு விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தைத் தொடர்ந்து நடத்துதல் கூடாது.

(3) உட்பிரிவு (2)இன்படி உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் இருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் முறையில் மூவாயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

**7. புதுப்பித்தல்.–** (1) இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமத்தின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அத்தகைய உரிமத்தின் காலஅளவு முடிவுறும் தேதிக்கு முன்பு மூன்று மாதங்களுக்குக் குறையாமல் செய்யப்படுதல் வேண்டும்:

**வரம்புரை**: மேற்சொன்ன காலம் முடிவடைந்த பின்பு, அத்தகைய விண்ணப்பத்தை ஆட்சியர் ஏற்கலாம். ஆனால் உரிமத்தின் காலம் முடிவடைவதற்கு முன்பு, உரிய காலத்திற்குள் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் செய்வதிலிருந்து விண்ணப்பதாரர் போதுமான காரணங்களால் தடுக்கப்பட்டிருக்கிறார் என்று அவர் திருப்தியடைந்திருந்தால் அதனை ஏற்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் கூடுமான அளவுக்கு, பிரிவு 5இன்படி உரிமம் வழங்குவது தொடர்பாக அவை பொருந்தியிருப்பதைப் போன்றே உரிமத்தைப் புதுப்பித்தல் தொடர்பானவற்றிற்கும் பொருந்தும்.

**8. உரிமத்தின் உள்ளடக்கங்கள்.–** (1) உரிமமானது,–

(a) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் பெயரை மற்றும் இருப்பிடத்தை;

(b) அதனுடைய மேலாளரின் மற்றும் தங்கியிருக்கும் மேலாளரின் பெயரை;

(c) மகளிர் அல்லது குழந்தைகளுக்காக அல்லது இரண்டுக்கும் சேர்ந்ததாக அந்தக் காப்பகங்களின் தன்மையை;

(d) காப்பகங்களில் அனுமதிக்கப்படும் தங்கியிருப்பவர்களுடைய எண்ணிக்கையை;

(e) தங்குமிடம், துப்புரவு, சுகாதாரம் மற்றும் உடல் நலம் பேணுதல் தொடர்பான குறைந்தபட்ச தரநிலைகளை;

(f) வகுத்துரைக்கப்படும் பிற வரையறை மற்றும் விவரங்களைக்

குறித்துரைக்க வேண்டும்.

(2) ஆட்சியரின் எழுத்து வடிவிலான முன் இசைவின்றி, உரிமதாரர் எவரும் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு,–

(a) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் பெயரை அல்லது இருப்பிடத்தை மாற்றவோ;

(b) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள சேவை எதனின் நோக்கத்தைத் திருத்தம் செய்யவோ;

(c) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் தங்குபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதையோ,

செய்தல் கூடாது.

**9. உரிமத்தை இரத்து செய்வதற்கு அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான அதிகாரம்.–** (1) ஆட்சியர், உரிமதாரருக்கு அவருடைய கருத்துக்களை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பினை அளித்த பின்பு,–

(a) அத்தகைய உரிமம் பொய்யான விவரத்தை அளித்தோ அல்லது மோசடியாகவோ பெறப்பட்டிருக்கிறது என்று அவருக்குத் தோன்றுமானால்;

(b) உரிமதாரர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் அல்லது உரிமத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் எதற்கும் இணங்காமல் முரண்பட்டிருக்கிறார் அல்லது இணங்க நடக்கத் தவறியிருக்கிறார் என்றால் ;

(c) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தின் மேலாண்மை மனநிறைவு அளிக்காத வகையில் அல்லது தங்கியிருப்பவர்களின் ஒழுக்கம் மற்றும் உடல்நலத்திற்கு மிகவும் ஊறு ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்றால்;

(d) ஆட்சியரின் கருத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது அந்த நோக்கத்திற்குப் பொருத்தமற்று இருப்பதாகத் தோன்றுமானால்,

உரிமம் எதையும் இரத்து செய்யலாம்.

(2) ஆட்சியர், இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமம் எதுவும் இரத்து செய்யப்படுவதற்கு உரியதாக இருக்கின்றது என்று கருதுவாரானால், உரிமம் ரத்து செய்யப்படும் நிலையில் இருக்கும்போது காரணங்களை எழுத்துப்பூர்வமாக எழுதி, பதிவு செய்து, உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் மற்றும் அத்தகைய

நிகழ்வில், எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு எதுவும் அளிக்கத் தேவையில்லை.

(3) ஆட்சியர், தன்னிச்சையாகவோ அல்லது விண்ணப்பத்தின் பேரிலோ உட்பிரிவு (1)இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதையும்,–

(a) பதிவேட்டில் வெளிப்படையாக காணப்படுகிற தவறு அல்லது பிழையின் அடிப்படையில்;

(b) ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்பு புதிய பொருண்மைகள் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட அடிப்படையில், அல்லது

(c) எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்யப்படும் போதிய பிற காரணங்கள் எதற்காகவும்

மறு ஆய்வு செய்யலாம்:

**வரம்புரை**: ஆட்சியர் இந்த உட்பிரிவின்படி நபர் எவருக்கும் அவருடைய கருத்தினை எடுத்துரைப்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை அளித்திருந்தாலன்றி, நபர் எவருக்கும் ஊறு உண்டாக்கும் வகையில் ஆணையைப் பிறப்பித்தல் கூடாது.

(4) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் தொடர்பான உரிமம் உட்பிரிவு (1)இன்படி அல்லது உட்பிரிவு (2)இன்படி நீக்கம் செய்யப்படுகிறபோது அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகிறபோது,–

(a) மேல்முறையீட்டிற்காக வகுத்துரைக்கப்பட்ட காலஅளவு முடிவடைவதன்பேரில், உடனடியாக, இரத்து செய்யப்பட்ட அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட ஆணைக்கு எதிராக, பிரிவு 10 இன்படி மேல்முறையீடு ஒன்று தாக்கல் செய்யாமல் இருக்கிற நிலையில்;

(b) அத்தகைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதும் ஆனால், மேல்முறையீட்டு ஆணையின் தேதியிலிருந்து இரத்து செய்யும் அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்கும் ஆணை அதே நிலையில் இருக்கிற நிலையில் ,

நிகழ்விற்கேற்ப, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது செயல்படாது இருத்தல் வேண்டும்.

(5) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமானது உட்பிரிவு (4)இன்படி செயல்படாது இருக்கும் போது, ஆட்சியர், அத்தகைய நிறுவனத்தில் தங்கியிருக்கும் மகளிர் மற்றும் குழந்தை எவரையும்,–

(a) நிகழ்விற்கேற்ப, அவர்களது பெற்றோர் அல்லது சட்டப்படியான காப்பாளரின் பாதுகாப்பில் ஒப்படைக்குமாறு;

(b) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உரிமம் பெற்றுள்ள பிற விடுதிக்கு, தங்கும் விடுதிக்கு அல்லது காப்பகத்திற்கு மாறுதல் செய்யுமாறு,

பணிக்கலாம்.

**10. மேல்முறையீடு.–** உரிமம் வழங்குவதற்கு மறுக்கின்ற அல்லது உரிமத்தை இரத்து செய்கின்ற அல்லது உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கின்ற ஆட்சியரின் ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் எவரும், வகுத்துரைக்கப்படும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய காலஅளவிற்குள் இதன் பொருட்டு அதனால் குறித்துரைக்கப்படும் அரசுக்கு அல்லது அத்தகைய அதிகாரஅமைப்பிற்கு மேல்முறையீடு ஒன்றினைச் செய்யலாம்:

**வரம்புரை**: நிகழ்விற்கேற்ப, அரசு அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்படும் அதிகாரஅமைப்பு, மேல் முறையீட்டாளர் உரிய காலத்தில் மேல்முறையீடு செய்வதிலிருந்து போதிய காரணத்தால் தடுக்கப்பட்டுள்ளார் என மனநிறைவு அடையுமானால், அவ்வாறு வகுத்துரைக்கப்பட்ட காலஅளவு முடிவுற்ற பின்னரும் மேல்முறையீடு ஒன்றினை அனுமதிக்கலாம்.

**11. உரிமத்தை ஒப்படைத்தல்.–** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் உரிமதாரர், அந்த விடுதிக்காக, தங்கும் விடுதிக்காக அல்லது காப்பகத்திற்காக வழங்கப்பட்ட உரிமத்தைத் திரும்பப் பெறுவதற்கான அவருடைய கருத்தினை எழுத்துப்பூர்வமாக ஆறுமாதக் கால அறிவிப்பை ஆட்சியருக்கு அளிப்பதன் பேரில் திரும்பப் பெறலாம். மேற்சொன்ன காலம் முடிவடைவதற்கு முன்பு அறிவிப்புத் திரும்பப் பெறப்பட்டாலன்றி, உரிமமானது மேற்சொன்ன காலம் முடிவடைவதன்பேரில் செயல்விளைவு பெறாது மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் செயல்பாடற்றுப் போகும்.

## பகுதி – III

## மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களின் பதிவு

**12. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களின் பதிவு.–** (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று அல்லது அதற்குப் பின்பு, பிற சட்டம் எதனின்படியும் நிறுவப்பட்ட, பதிவு செய்யப்பட்ட அல்லது பராமரித்துவரப்படும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒவ்வொன்றும், அது எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், வகுத்துரைக்கப்படும் காலஅளவிற்குள் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று இருந்துவரும் மற்றும் பிற சட்டம் எதனின்படியும் நிறுவப்பட்ட, பதிவு செய்யப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்டுவரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒவ்வொன்றும், எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள் இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்றினைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான அத்தகைய காப்பகத்தின் உரிமையாளர் அல்லது மேலாளர், வகுத்துரைக்கப்படும் அத்தகைய விவரங்கள் அடங்கியுள்ள அத்தகைய படிவத்தில் ஆட்சியருக்கு விண்ணப்பம் ஒன்றினைச் செய்ய வேண்டும். ஆட்சியர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் பதிவு செய்தல் தொடர்பாக இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கி உள்ளது என்று மனநிறைவு அடைவதன்பேரில், வகுத்துரைக்கப்படும் அத்தகைய படிவத்தில் பதிவு செய்தலுக்கான சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(4) ஆட்சியர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்றிற்குப் பதிவுச் சான்றிதழ் ஒன்றினை வழங்கிய பின்பு, வகுத்துரைக்கப்படும் விவரங்களை வகுத்துரைக்கப்பட்ட பதிவேடு ஒன்றில் பதிவு செய்தல் வேண்டும்.

(5) இந்தப் பகுதியில் உள்ள எதுவும், அரசால் அமைக்கப்பட்ட, நிறுவப்பட்ட அல்லது மேலாண்மை செய்யப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் எதற்கும் பொருந்தாது.

## பகுதி – IV

## மேலாளரின் பணியமர்த்தம், அவருடைய கடமைகள் மற்றும் பொறுப்புகள்

**13. மேலாளரின் பணியமர்த்தம்.–** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதிலும் தங்குவதற்காக அதனை வாடகைக்குவிடும் ஒவ்வொரு நபரும், மேலாளர் ஒருவரைப் பணியமர்த்தம் செய்ய வேண்டும். மேலாளர் எவரும் பணியமர்த்தம் செய்யப்படாத நிகழ்வு எதிலும், தங்குவதற்காக வளாகங்களை வாடகைக்கு விடும் நபர் அத்தகைய வளாகங்களுக்கான மேலாளராக கருதப்படுதல் வேண்டும். மேலாளர், அந்த வளாகங்களில் நிரந்தரமாகத் தங்கியிருக்கவில்லை என்றால் அந்த வளாகங்களில் தங்கியிருக்கும் மேலாளராக இருப்பவர், மேலாளருக்குரிய அனைத்து அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளுடன் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்:

**வரம்புரை**: விடுதியில், தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் பெண் குழந்தைகள் மற்றும் மகளிர் தங்கியிருக்கிறபோது மேலாளர் மற்றும் தங்கியிருக்கும் மேலாளர், ஒரு பெண்ணாக இருத்தல் வேண்டும்

(2) மேலாளராக அல்லது தங்கியிருக்கும் மேலாளராக இருக்கும் எந்த ஒரு நபரும், அரசு மருத்துவ அலுவலர் தரநிலைக்குக் குறையாத மருத்துவ அலுவலர் ஒருவரால் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் உடல் தகுதிச் சான்றிதழ் ஒன்று அவருக்கு அளிக்கப்பட்டிருந்தாலன்றிப் பணியமர்த்தம் செய்யப்படுதல் கூடாது.

(3) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் ஒவ்வொருவரும், அவருடைய முந்தைய விவரங்களை வட்டாரக் காவல் துறையிடம் விசாரித்த பின்பே பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(4) தங்கியிருக்கும் ஒவ்வொரு ஐம்பது நபர்களுக்காகவும், ஒரு மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

**14. மேலாளரின் பொறுப்புகள்.–** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகமொன்றின் உரிமையாளர் அல்லது மேலாளர்:–

(a) அனைத்துக் கட்டடங்களையும் மற்றும் கட்டடத்தில் உள்ள உபயோகப் பொருட்கள், பொருத்துக்கருவிகள் மற்றும் இணைப்புக் கருவிகள் அனைத்தையும் நல்ல நிலையில் பழுதுபார்த்தும் சுத்தமாகவும் மற்றும் உடல் நலத்துக்கேற்ற நிலையிலும் பராமரித்தல் வேண்டும்.

(b) குடியிருப்பு வளாகங்களை, குப்பைகள் சேராமலும், துர்நாற்றம் வீசாமலும் அல்லது தேவையற்ற செடிகொடிகள் வளராமலும் பாதுகாத்து வரவேண்டும்.

(c) குடியிருப்பு வளாகங்களின் அனைத்துப் பகுதிகளும் அனைத்து நேரங்களிலும் போதுமான வெளிச்சமுடனும், காற்றோட்ட வசதியுடனும் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

(d) குப்பையை, கழிவை அல்லது குப்பைக் கூளத்தை அகற்றுவதற்கு முன்பு, சேகரித்து வைப்பதற்காகப் பொருத்தமான இடத்தைத் தேர்வுசெய்தல் வேண்டும்.

(e) தொடர்புடைய சட்டங்களின்படி வகுத்துரைக்கப்பட்ட விதத்தில் செயற்கை விளக்கு, அவசர விளக்கு மற்றும் போதுமான தீ அணைப்பான்களைப் பழுதுபார்த்து நல்ல நிலையிலும் மற்றும் திறம்பட செயல்படும் நிலையிலும் பேணிவருதல் வேண்டும்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியின், தங்கும் விடுதியின் அல்லது காப்பகத்தின் மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர்,–

(a) வளாகங்களுக்குள் மண்ணெண்ணெய், பெட்ரோல், எரிசாராயம் அல்லது வெடிக்கும் அல்லது தீப்பற்றி எரியும் பொருள்கள் எதையும் சேமித்து வைத்தலோ அல்லது வைத்திருத்தலோ அல்லது சேமித்து வைக்கப்படுவதற்கு அனுமதித்தலோ அல்லது வைத்திருப்பதற்கு அனுமதித்தலோ கூடாது;

(b) உயரமான படிக்கட்டுகளில், வழியில் அல்லது ஆபத்துக் காலத்தில் வெளியேறும் அவசர வழிகளில் தடை எதனையும் வைத்தலோ அல்லது வைப்பதற்கு அனுமதித்தலோ கூடாது;

(3) படுக்கை அறையாகக் குறிப்பிடப்பட்டுள்ள அறை ஒன்று அல்லாத பிற அறை எதனையும், உள்ளே தங்கியிருப்பவர்கள் துயில் இடமாகப் பயன்படுத்துவதை மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் அனுமதித்தல் கூடாது.

(4) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் குறிப்பிடப்படும் அறை ஒன்றில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலான உள்ளே தங்குபவர்களுக்கு மட்டும் தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்.

(5) (a) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர், வளாகத்தில் நபர் ஒருவர் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அல்லது பாதிக்கப்படக்கூடுமென அவருக்குத் தெரிகிறபோது, உடனடியாக, அந்த இடத்தின் சூழ்நிலை குறித்து சுகாதார ஆய்வாளருக்குத் தெரிவித்தல் வேண்டும் மற்றும் உடனடியாக தங்கியிருக்கும் இடத்தில் பிற தங்கியிருப்போர்களால் பயன்படுத்தப்படும் பொருட்களைத் தொடாமலிருக்கும் வண்ணம் அந்த நபரைத் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும்.

(b) மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர்,–

(i) தொற்றுநோயினால் பாதிப்படைந்த அல்லது பாதிக்கப்படக்கூடுமெனச் சந்தேகிக்கும் நபர் எவரையும் தனிமைப்படுத்துதல் அல்லது அகற்றுதல்;

(ii) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியை, தங்கும் விடுதியை அல்லது காப்பகத்தை அல்லது அத்தகைய நபர் பயன்படுத்துகின்ற படுக்கையை, விரிப்பான்களை, போர்வைகளை அல்லது பிற பொருள்களைச் சுத்தப்படுத்துதல் மற்றும் தொற்று நோய்பரவாமல் தடுத்தல்; மற்றும்

(iii) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தில், தங்கியிருப்போர்களுக்கு இடையே தொற்றுநோயைத் தடுப்பதற்கு அல்லது அதனைக் குறைப்பதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாக,

சுகாதார ஆய்வாளரின் பணிப்புரை ஒவ்வொன்றிற்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

(6) மேலாளர் மற்றும் தங்கியிருக்கும் மேலாளர், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியில், தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் தங்கியிருப்பவர்கள் மனரீதியாக அல்லது உடல்ரீதியாகத் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

## பகுதி – V

## பாதுகாப்பு மற்றும் காவலுக்கான நடவடிக்கைகள்

**15. ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டடத்தையே பயன்படுத்த வேண்டும்.–** (1) தொடர்புடைய சட்டத்தின்படி தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டடத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் இருத்தல் வேண்டும்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒவ்வொன்றிலும், பெண் குழந்தைகளுக்காக மற்றும் மகளிருக்காகத் தனிக் கட்டடம் இருத்தல் வேண்டும் மற்றும் சிறுவர்களுக்காகத் தனிக் கட்டடம் இருத்தல் வேண்டும். தவிர்க்கமுடியாத காரணங்கள் எதற்காகவும் சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் ஒரே கட்டடத்தில் தங்கியிருக்கிறபோது அவர்களைத் தனித்தனியான அறையில் தங்கவைத்தல் வேண்டும்.

(3) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒவ்வொன்றிலும், உள்ளே ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் தங்கியிருக்கின்ற நிலையில், ஒவ்வொரு நுழைவுவாயிலிலும் வெளியே செல்லும் வழிகள் ஒவ்வொன்றிலும், கண்காணிப்புத் தொலைக்காட்சியை அல்லது கணினி காணொலிப் பதிவு செய்யும் கருவியை வைத்தல் வேண்டும்.

**16. பாதுகாப்புப் பணியாளர்களின் பணியமர்த்தம்.–** (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் ஒவ்வொன்றிலும், தங்கியிருப் பவர்களுக்கு இருபத்து நான்கு மணிநேரமும் பாதுகாப்பு அளிப்பதற்குப் போதிய எண்ணிக்கையில் பாதுகாப்பு பணியாளர்கள் பணியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) பாதுகாப்புப் பணியாளர்களைக் குறிப்பாக முன்னாள் இராணுவத்தினர்களிலிருந்து, ஓய்வுபெற்ற

காவல் அலுவலர்களிலிருந்து மற்றும் ஊர்க் காவல் படையினரிடமிருந்து பணியமர்த்தம் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவர்கள் ஐம்பந்தைந்து வயதிற்கு மேற்பட்டு இருத்தல் கூடாது.

(3) பாதுகாப்புப் பணியாளர்கள் ஒவ்வொருவரின் முந்தைய விவரங்கள், உள்ளூர்க் காவல் நிலையத்தில் சரிபார்த்த பின்பு பணியமர்த்தம் செய்தல் வேண்டும்.

(4) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகத்தின் ஒவ்வொரு நுழைவாயிலிலும், வெளியே செல்லும் வழி ஒவ்வொன்றிலும், பாதுகாப்புப் பணியாளர்கள் அமர்த்தப்படுதல் வேண்டும். அவர்கள், மேலாளரின் அல்லது தங்கியிருக்கும் மேலாளரின் அனுமதியின்றி, தங்கியிருப்பவர்கள் இருக்கும் பகுதிக்குள் நுழைதல் கூடாது.

**17. வருகை தருபவர்களின் பதிவேட்டினைப் பராமரித்தல்.**– மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி மற்றும் காப்பகம் ஒவ்வொன்றிலும், வருகைப் பதிவேடு ஒன்றினைப் பராமரிக்க வேண்டும். அதில் வருகைதருபவர் ஒவ்வொருவருடைய பெயர், முகவரி, உறவு, நேரம் மற்றும் வருகையின் நோக்கம் பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

**18. மேலாளர், பெற்றோர் முதலானவர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.**– (1) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி மற்றும் காப்பகம் ஒன்றின் மேலாளருக்கு, தங்கியிருக்கும் மேலாளருக்கு மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்குப் புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை வழங்குதல் வேண்டும். உள்ளே தங்கியிருப்பவர்களின் பெற்றோர் அல்லது சட்டப்பூர்வமான காப்பாளர்களுக்கும்

புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுதல் வேண்டும்.

(2) மேலாளரின், தங்கியிருக்கும் மேலாளரின் மற்றும் பாதுகாப்புப் பணியாளரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்களை, அவ்வளாகங்களில் தெரியும்படியான இடத்தில் காணுமாறு வைக்கப்படுதல் வேண்டும்.

**19. குறித்த சில நிகழ்வுகள் தொடர்பான அறிக்கை.–** மேலாளர் அறிவுக்கு எட்டிய வரையில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியில், தங்கும் விடுதியில் அல்லது காப்பகத்தில் தங்கியுள்ள எவரின் உடலை, மனதை மற்றும் உடைமையைப் பாதிக்கின்ற நிகழ்வுகள் குறித்தும், அந்த நிகழ்வுகள் ஏற்பட்டதற்கான பாதகமான சூழ்நிலைகள் குறித்தும் உடனடியாகச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை செய்வதோடுகூட, அப்பகுதியின் அதிகார வரம்புடைய காவல்துறைக்கும் அறிவிக்கவேண்டும்.

## பகுதி – VI

## குற்றங்கள் மற்றும் தண்டனைகள்

**20. உரிமம் பெறாததற்கான மற்றும் பதிவு செய்யாமைக்கான தண்டனை.–** (1) பிரிவுகள் 5 அல்லது 6இன்படி உரிமத்தைப் பெறத் தவறுகின்ற நபர் எவரும், இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீடிக்கப்படக்கூடிய பணத்தண்டம் (அபராதம்) விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(2) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகம் ஒன்று, பிரிவு 12 உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)இன்படி பதிவு செய்யப்படத்தக்கதாக இருக்கும் நிலையில் குறிப்பிடப்படும் காலத்திற்குள் பதிவு செய்யத்

தவறுகிறது என்றால், அத்தகைய காப்பகங்களின் உரிமையாளர் அல்லது மேலாளர் அல்லது தங்கியிருக்கும் மேலாளர் இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டம் (அபராதம்) விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(3) இந்தச் சட்டத்தின் பிரிவுகள் 5,6,12 ஆகிய வகைமுறைகள் அல்லாத பிற வகைமுறைகள் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதி எதனின் அல்லது உரிமம் ஒன்றின் அல்லது பதிவுச் சான்றிதழ் ஒன்றின் நிபந்தனைகள் எவற்றிற்கும் இணங்கியிருக்கத் தவறுகிற நபர் எவரும், முதல் குற்றமாக இருக்கின்ற நிகழ்வில், இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டத்துடன் (அபராதத்துடன்) மற்றும் இரண்டாவது அல்லது அதற்கு அடுத்தபடியான குற்றமாக இருக்கின்ற நிகழ்வில், மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறைத் தண்டனையுடன் மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பணத்தண்டம் (அபராதத்துடன்) விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**21. நிறுமங்களால் செய்யப்படும் குற்றங்கள்.–** (1) இந்தச் சட்டத்தின்படி குற்றம் ஒன்று, நிறுமம் ஒன்றினால் செய்யப்பட்டிருந்தால், அந்தக் குற்றம் செய்யப்பட்ட நேரத்தில் நிறுமத்தின் அலுவலை நடத்துவதற்கு நிறுமத்திற்குப் பொறுப்பாய் இருந்தவரும், நிறுமத்தின் பொறுப்பினைக் கொண்டிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அதுபோல அந்த நிறுமமும் குற்றத்தைச் செய்திருப்பதாகக் கருதப்பட்டு அவற்றிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாவர்:

**வரம்புரை**: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அக்குற்றத்தைச் செய்த அத்தகைய நபர் எவரையும், அக்குற்றம் அவரை அறியாமல் செய்யப்பட்டது என்றும் அல்லது அவர் அத்தகைய குற்றம் நிகழ்வதைத் தடுப்பதற்கு உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டிருந்தார் என்றும் அவர் மெய்ப்பிப்பாரானால், தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) உட்பிரிவு 1இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், இந்தச் சட்டத்தின்படி குற்றம் எதுவும் நிறுமம்ஒன்றினால் செய்யப்பட்டிருந்தால் மற்றும் அது நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரின் செயலின் பேரில், அவருடைய சம்மதத்துடன், மறைமுக ஆதரவுடன் அல்லது கவனக்குறைவு எதனாலும் குந்தகம் நடைபெற்றுள்ளது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றால் அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் அந்தக் குற்றத்தைச் செய்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படி அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் உள்ளாவர்.

விளக்கம்:– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக,–

(a) "நிறுமம்" என்பது, கூட்டுரும அமைப்பு எதுவும் மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனி நபர்களின் பிற கழகத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) "இயக்குநர்" என்பது,

(i) ஒரு நிறுவகம் தொடர்பாக நிறுவகத்திலுள்ள பங்குதாரர் ஒருவர் எனப் பொருள்படும்.

(ii) ஒரு சங்கம், ஒரு பொறுப்புக்கட்டளை அல்லது பிற தனி நபர்களின் கழகம்

என்பது நிகழ்வுக்கேற்ப, சங்கத்தின் பொறுப்புக்கட்டளை அல்லது பிற தனி நபர்கள் கழகத்தின் விதிகளின்படி சங்கத்தின், பொறுப்புக்கட்டளையின் அல்லது பிற தனிநபர்கள் கழகத்தின், விதிகளின்படி ஒப்படைக்கப்பட்ட நபர் எனப் பொருள்படும்.

## பகுதி VII

## பல்வகை

**22. ஆய்வு செய்வதற்கான அதிகாரம்.–** ஆட்சியர் அல்லது அவரால் எழுத்து வடிவில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரும், பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளாலோ அல்லது விதிகள் எதனாலோ அல்லது உரிமத்தின் வரைக்கட்டுகளாலோ அல்லது பதிவுச் சான்றிதழ் இணங்கியுள்ளதா என்பதனை உறுதி செய்யும் நோக்கத்திற்காக, அவர் நியாயமான அனைத்து நேரங்களிலும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதிலும் நுழையலாம் மற்றும் அவருடைய ஆய்விற்காக ஆவணத்தை, பதிவேட்டை அல்லது அதன்படி வைக்கப்பட்டுள்ள பதிவுருவினை முன்னிலைப்படுத்துமாறு கோரலாம் மற்றும் அத்தகைய நிறுவனத்தின் செயற்பாடு தொடர்பாகத் தகவல் எதனையும் கேட்டுப்பெறலாம்:

**வரம்புரை**: ஆட்சியர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர், பெண்கள் தங்கியிருக்கும் விடுதி அமைந்திருக்கும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய இரண்டு பெண்கள் அவருடன் சேர்ந்து வந்தாலன்றி விடுதி, தங்கும் விடுதி அல்லது காப்பகம் எதற்குள்ளும் நுழையக் கூடாது.

**23. பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படுவதில்லை.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி, அதனைத் திறக்குறைவு செய்தல் ஆகாது.

**24. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.–** நபர் எவருக்கும் எதிராக, இந்தச் சட்டம் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது பணிப்புரை அல்லது ஆணைக்கிணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

**25. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசானது, அறிவிக்கையின் மூலமாக இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும் மற்றும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு ஊறு செய்யாமலும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடு அனைத்திற்காகவும் அல்லது எவற்றிற்காகவும் அத்தகைய விதிகளைச் செய்யலாம் அதாவது:–

(a) விண்ணப்பத்தின் படிவம், விண்ணப்பத்துடன் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள் மற்றும் உரிமத்தை வழங்குவதற்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம்;

(b) எந்தப் படிவத்தில் மற்றும் எந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உரிமம் வழங்கப்படலாம்;

(c) எந்த முறையில் மற்றும் எந்தக் கால வரம்பிற்குள் மேல்முறையீடொன்று விண்ணப்பிக்கப்படலாம்;

(d) விண்ணப்பப்படிவம், அத்தகைய விண்ணப்பத்துடன் அடங்கியிருக்க வேண்டிய விவரங்கள் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான காப்பகங்களைப் பதிவு செய்ய வேண்டிய காலவரம்பு;

(e) எந்தப் படிவத்தில் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்;

(f) பதிவேட்டின் படிவம் மற்றும் பதிவின்பேரில் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய விவரங்கள்;

(g) மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் விடுதி மற்றும் காப்பகம் ஒன்றின் அறை ஒன்றில் தங்க வைக்கக் கூடியவர்களின் எண்ணிக்கை; மற்றும்

(h) மேலாளராக அல்லது தங்கியிருக்கும் மேலாளராகப் பணியமர்த்தம் செய்வதற்கான உடல்தகுதிச் சான்றிதழ் எந்தப் படிவத்தில் தரப்படுதல் வேண்டும்.

(3) (a) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அந்த விதிகள் குறிப்பிட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று செல்லாற்றலுக்கு வரும்.

(b) இந்தச் சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும் குறிப்பிட்ட நாளன்று செல்லாற்றலுக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை வெளியிடப்பட்ட அந்த நாளன்று செல்லாற்றலுக்கு வரும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அவை

செய்யப்பட்ட பின்பு அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், அது சட்டமன்றத்தில் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடையும் முன்பு அல்லது அடுத்த கூட்டத்தொடரில் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதிலும் சட்டமன்றமானது மாற்றமைவு எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றமானது விதியை அல்லது அறிவிக்கையைச் செய்யக் கூடாது அல்லது பிறப்பிக்கப்படக் கூடாது எனக் கருதினால் அதன்பின்பு அந்த விதி அல்லது அறிவிக்கையானது அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்விளைவு உடையதாகும் அல்லது நிகழ்விற்கேற்ப, செயல்விளைவு இல்லாதிருக்கும் எனினும் அத்தகைய மாற்றம் அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் ஊறின்றிஇருத்தல் வேண்டும்.

26. **பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசு, அதனுடைய கருத்தில் தேவையானதாக அல்லது உகந்ததானதாக இருக்கின்ற அத்தகைய பணிப்புரைகளை ஆட்சியருக்கு வழங்கலாம். ஆட்சியர் அத்தகைய பணிப்புரைகள் அனைத்திற்கும் செயல்விளைவு அளிக்க வேண்டும்.

27. **இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ஆணையின் மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அவற்றுக்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக

இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை**: அத்தகைய ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டாண்டுகள் காலஅளவு முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.